சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள்: 10.02.2026

வா.சா.1– சந்திரசேகரன் S/o சின்னக்கருப்பன்

O.S. No.459/2019

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

குறுக்கு விசாரணை :

வா.சா.ஆ.1 ஆவணமானது பதிவு செய்யப்படாத பாகபிரிவினை குறிப்பு என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை பத்திர தாளில் எழுதாமல் நோட்டு புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை தான் பாகபிரிவினைக்கான ஆவணமாக நான் கட்சியாடிவருகிறேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் அம்பலக்காரர் முன்னிலையில் எழுதப்பட்டதாக சாட்சி தாமாக முன்வந்து குறிப்பிடுகிறார்.மேற்படி ஆவணத்தி சாட்சியாக அம்பலக்காரர்கள் கையெழுத்திட்டுள்ளார்களா என்றால் கையெழுத்திட்டுள்ளார்கள். அதில் சிலர் இறந்துவிட்டார்கள். முருகன் இளங்கச்சி, முத்துராமன் இளங்கச்சி ஆகிய அம்பலக்காரர்கள் இறந்துவிட்டார்கள். ம.ராசு அம்பலம் உயிருடன் தான் இருக்கிறார். என்னுடன் பிறந்த மருதசாமி மற்றும் சரோஜாவும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கையெழுத்து செய்துள்ளார்கள். நானும் கையெழுத்து செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணம் தான் யார் யாருக்கு என்னென்ன பாகம் என்று பிரித்து ஒதுக்கப்பட்ட பாகபிரிவினை பத்திர் என்று சொல்லி தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் முருகன் இளங்காச்சி என்று யாரும் கையெழ்துது செய்யவில்லை என்று சாட்சியிடம் ஆவணத்தை காட்டி கேட்கப்பட்டது, சாட்சி அதை பார்வையிட்டு,

முருகன் என்று மட்டும் தான் உள்ளது என்றும் இளங்கச்சி என்ற பெயர் இல்லை என்றும் சாட்சி குறிப்பிடுகிறார். அதே போல் ராசுஇளங்கச்சி என்றோ, ராசு அம்பலம் என்றோ யாரும் கையெழுத்து செய்யவில்லை என்றால் ராசு அம்பலம் கிடையாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் முதல் 6 பக்கத்தில் யாரேனும் கையெழுத்து செய்துள்ளார்களா என்றால் இல்லை. வா.சா.ஆ-1 ஆவணத்தில் 7ம் பக்கத்தில் சாட்சியாக சின்னகருப்பன், மருதுசாமி, சந்திரசேகரன், முத்துராமன் ஆகியோர் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார்கள் என்றும், தரப்பினர்களாக கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தை வைத்து யார் யாருக்கு என்னென்ன பாகம் ஒதுக்கப்பட்டது என்பதை அறுதியிட்டு கூற முடியாது என்றால் சரியல்ல. அதன்படி தான் பிரித்து அவரவர் பாகத்தை அவரவர் அனுபவித்து வந்தோம். மேற்படி பாகத்தின் அடிப்படையில்அவரவர் பாகத்தை அனுபவிப்பதற்கு பிரித்து பட்டா வாங்கப்பட்டதா என்றால் இல்லை. இந்த வழக்கில் சரோஜா, சாந்தகுமாரி, மருதுசாமி மற்றும் ராதை ஆகியோர் மீது தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். ராதைக்கு வழக்கு சொத்தில் பங்கு இல்லை. ராதை யாரென்றே தெரியாது. என் அப்பாவிற்கு 2 தாரம் என்றால் சரிதான். மூத்த தாரத்தின் பெயர் பாப்பாத்தி அம்மாள் என்றால் சரிதான். பாப்பாத்திஅம்மாளின் மகள் தான் ராதை என்றால் இல்லை. எதனடிப்படையில் 4ம்பிரதிவாதியாக ராதை தரப்பினராக சேர்த்தோம் என்றால் அவராகவே வந்து இந்த வழக்கில் தரப்பினராக சேர்ந்து கொண்டார். ராதையை யாரென்றே எனக்கு தெரியாது. ராதை, என் அப்பா மீது வழக்கு தாக்கல் செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியும், அந்த வழக்கு தள்ளுபடியாகிவிட்டது. 01.09.2008ல் வா.சா.ஆ.4 உயிலை எனது தகப்பனார் சின்னகருப்ப கோனார், என் தாயாருக்கும், இந்த வழக்கின் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும், எனக்கும் சேர்த்து உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் எங்களுடைய சம்மதம் இல்லாமல் என் அப்பா எழுதிய உயில் ஆகும். என்

தகப்பனார் இறந்தபின்னர் தான் அந்த உயில் பற்றி தெரியவந்தது. அந்த உயிலை பற்றி தெரியவந்தபிறகு தான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். என் வழக்குரையில் என் அப்பா இறந்த பிறகு தான் உயில் விபரம் தெரியவந்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும் அவராக தன்னிச்சையாக எழுதிவைத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என் வழக்குரையில் என் அப்பா மேற்படி உயிலை சித்தசுவாதினம் இல்லாத போது எழுதி வைத்த உயில் என்றும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். என் அப்பா சித்தசுவாதினம் இல்லாமல் இருந்தார் என்பதை நிருபிக்க ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என் அப்பா 2010ம் ஆண்டு இறந்தார். என் அப்பா இறப்பதற்குமுன்பே மேற்படி உயில் எழுதப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது, இறந்த பின்னர் தான் தெரியும். 2010ம் ஆண்டு ஐப்பசிமாதம் 26ம் தேதி இறந்தார். ஒருமாதத்திற்குள்ளாக உயில் பற்றி தெரியவந்தது. என் அப்பா இறந்த பின்னர் 2013ம் ஆண்டு தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் 33 இன சொத்துக்களை பொறுத்து, எந்த தேதியில் யார் பெயரில் ஆவணம் உள்ளது என்பதை குறிப்பிட்டு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அனுபவித்து வந்த சொத்தை பொறுத்து தான் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். உயில் படி 1ம் பிரதிவாதி சரோஜாவிற்கு ஒருபகுதியும், 2ம் பிரதிவாதி சாந்தகுமாரிக்கு ஒருபகுதியும், 3ம் பிரதிவாதிக்கும், 4ம் பிரதிவாதிக்கு ஒருபகுதியையும், என் தாயார் அமிர்தம் அம்மாளுக்கு ஒருபகுதியும் பிரித்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் பிரித்து கொடுத்தபடி அவர் உயில் எழுதவில்லை. நான் தவறாக சொல்கிறேன் என்றும் என் அப்பா பிாத்து கொடுத்தபடி தான் என் சகோதரிகள் சொத்தை அனுபவித்து வருகிறாகள் என்றா் அது தவறாகும். என் சகோதரிகளுக்கு பிரித்து கொடுக்கப்பட்ட A மற்றும் B அட்டவணை சொத்தை உயில் கண்டதை பொறுத்து பட்டா பெயர்

மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி உயிலில் கண்ட சொத்தை அவரவர்கள் அனுபவித்து பட்டா பெயர்மாற்றம் செய்துள்ளார்கள் என்றால் அது தவறாகும். அதேபோல் D அட்டவணையில் உள்ள என் அம்மா பெயருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை அவர் இறந்த பிறகு நான் அடைந்துகொள்ளவேண்டியது என்று உயிலில் கண்டுள்ளது என்றால் அவ்வாறு உயிலில் எழுதப்பட்டுள்ளது உணமைதான். உயிலில் கண்ட C, D அட்டவணை சொத்தை பொறுத்து தான் எனது சகோதரரான மருதுசாமியும் நானும் அனுபவித்து வருகிறோம் என்றும் அதை பொறுத்துதான் பாகம் கோர வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் A அட்டவணையில் உள்ள 2ம் இனசொத்தான வீடு என்னுடைய அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். 3/96 கதவிலக்கத்தில் உள்ள ஓட்டுவீட்டில் நான் இருக்கிறேன். 3/95ல் உள்ள காரைவீட்டில என் தம்பி மருதுசாமி குடியிருந்து வருகிறார். அது என் அப்பா இருந்த வீடு என்றால் சரிதான். அது இடிந்துவிட்டது என்றால் சரிதான். அந்த வீடு இடிந்தபிறகு தான் நான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதற்கு முன்பே தாக்கல் செய்துவிட்டேன். B அட்டவணையில் கண்டுள்ள 15 சவரன் தங்கநகையும், பவர் டிரில்லர் இருந்ததற்கு ஆவணம் இருக்கிறதா என்றால் இல்லை. மேற்படி நகை என் தாயாரின் நகை ஆகும். அதை இந்த வழக்கின் 1 முதல் 3 பிரதிவாதிகளான சரோஜா, சாந்தகுமாரி, மருதுசாமி வைத்துகொண்டார்கள். இதுதொடர்பாக காவல்நிலையத்திற்கு சென்றும் அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். பவர்டிரில்லர் மருதுசாமிக்கு பாகம் ஒதுக்கப்பட்டது அதனால் அவர் அதை வைத்துகொண்டார். பவர்டிரில்லர் தற்போது இல்லை என்றும், நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. B அட்டவணையில் கண்ட நகை மற்றும் பவர் டிரில்லர் இருப்பதற்கு ஆவணம்இல்லை என்றும் அதை நான் தவறாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரியிருப்பது போல பாகம் கிடைக்கத்தக்கது அல்ல என்றும் என் அப்பா 2008ல் உயில் எழுதி

வைத்ததன் அடிப்படையில் அவரவர்பாகத்தை அனுபவித்து வருகிறார் என்றும், ஆகவே இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2026.02.10 22:31:38 +0530

Sub Judge
Melur